Media Release

உடனடி வெளியீட்டுக்காக

## எக்ஸ்ப்ளோரர் ப்ராம்ப்ட்டன் யூத் பாஸ் (Explore Brampton Youth Pass) க்கான விண்ணப்பங்கள் இப்போது கிடைக்கப் பெறுகின்றன

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 27, 2023) - இந்த கோடைப்பருவத்தில் எக்ஸ்ப்ளோரர் ப்ராம்ப்ட்டன் யூத் பாஸ் (Explore Brampton Youth Pass) eனும் இலவச அனுமதிச் சீட்டு மூலம் ப்ராம்ப்ட்டனில் என்ன இருக்கிறது எனத் தேடிக்கண்டறியுங்கள் மற்றும் சுறுசுறுப்படையுங்கள்.

ப்ராம்ப்ட்டன் நகரம் 12-16 வயதுடைய ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகளுக்கு 2,000 எண்ணிக்கை வரையிலான எக்ஸ்ப்ளோரர் ப்ராம்ப்ட்டன் யூத் பாஸ்களை வழங்குகிறது. இந்த இலவச அனுமதிச் சீட்டு வைத்திருப்பவர்களுக்கு ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து பஸ்களில் பயணம் செய்ய கட்டணம் கிடையாது மற்றும் நீச்சல், ஸ்கேட்டிங் மற்றும் தேர்வு செய்யப்பட்ட விளையாட்டுகள் உட்பட, தேர்ந்தெடுக்கப்பட்ட ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கு நிகழ்வுகளுக்கு போக்கிற போக்கில் இலவச அணுகல் பெறுவார்கள்.

எக்ஸ்ப்ளோரர் ப்ராம்ப்ட்டன் யூத் பாஸ்களுக்கான விண்ணப்ப படிவங்கள் இன்று முதல் கிடைக்கப்பெறுகின்றன. இந்த இலவச அனுமதிச் சீட்டுகள் 2023 ஆம் ஆண்டின் கோடைப்பருவமாகிய ஜூலை 1 முதல் செப்டம்பர் 4 வரையிலும் செல்லுபடியாகும்.

நகரமெங்கும் இளைஞர்களுக்கான அணுகல் மற்றும் வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கம் கொண்ட இந்த முன்னோடி திட்டத்திற்கு 2022 ஆம் ஆண்டில், நகர் மன்றம் ஒப்புதல் அளித்தது. உடற்பயிற்சி, நீச்சல் மற்றும் கூடைப்பந்து ஆகிய மூன்று பொழுதுபோக்குகளை போகிறபோக்கில் அணுகும் வகையிலான திட்டங்களை உள்ளடக்கி 1,200க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள், அங்கீகரிக்கப்பட்டன.

எக்ஸ்ப்ளோரர் ப்ராம்ப்ட்டன் யூத் பாஸ் பற்றிய மேலும் தகவலுக்கும், விண்ணப்பிப்பதற்கும் இங்கு க்ளிக் செய்க.

பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு ஒன்டாரியோ (Parks and Recreation Ontario) அமைப்பிலிருந்து, இளைஞர்களுடன் நட்புறவான சமுதாயம் எனும் பிளாட்டினம் நிலைக்கான அந்தஸ்தினை, ப்ராம்ப்ட்டன் நகரம் கடந்த வருடங்களில் மூன்று முறை பெற்றிருக்கிறது; இதன் காரணமாகவே இளைஞர்களுக்கான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகளுக்கான சிறந்த அர்ப்பணிப்புக்காக, ப்ராம்ப்ட்டன் நகரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**அறிஞர் கூற்றுக்கள்**

“இந்தத் திட்டமானது, நமது சமூகத்தில் உள்ள இளைஞர்கள் தங்களுக்கான வாய்ப்புகளை எளிதில் அணுகுவதற்காகவும் மற்றும் அவற்றை அதிகரிப்பதர்காகவும், ஆரோக்கியமான, மகிழ்ச்சியான மற்றும் செழிப்பான நகரத்தை உருவாக்குவது பற்றியதாகும். செயல்பாடுமிக்க போக்குவரத்து நெட்வொர்க்குகளை உருவாக்குவதும், விளையாட்டு மற்றும் தடைகளை உடைத்து, பொழுதுபோக்குக்கான அணுகலை அனுமதித்து இளைஞர்களின் வாழ்க்கையில் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தும் பழக்கங்களை உருவாக்கவும் இணைப்புகளை கட்டமைக்கவும் உதவுகிறது.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான சமூகங்களை உருவாக்குவதில், எளிதில் அணுக வல்ல செயல்திட்டம் வரையறுப்பதற்கான அர்ப்பணிப்பு தேவைப்படுகிறது; இந்த உறுதிப்பாட்டுக்கு Explore Brampton Youth Pass எனும் இலவச அனுமதிச்சீட்டு ஆதரவளிக்கிறது. நகரத்தில் உள்ள எங்களின் அனைத்து பொழுதுபோக்கு மையங்களிலும் பல சலுகைகள் உள்ளன. புதிய அணியைக் கண்டறிவது, நீச்சல், ஸ்கேட்டிங், ஹைகிங் அல்லது பைக்கிங் என, ப்ராம்ப்ட்டனின் ஒவ்வொரு மூலையிலும் வாய்ப்பு உள்ளது. எங்களிடம் நம்பமுடியாத போக்குவரத்து நெட்வொர்க் உள்ளது, அதை நாங்கள் தொடர்ந்து உருப்பெருக்குகிறோம், எங்கள் சமூகத்தை இணைக்கிறோம் மற்றும் வாய்ப்புகளை அள்ளி வழங்குகிறோம்..”

- ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் *1 & 5; தலைவர், சமுதாய சேவைகள்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca